DR. H. V. HANDE : The work on the Eastern Highway from Madras to Kanyakumari via Mahabalipuram is being postponed for a number of years, whereas work on the Western Highway from Bombay to Kanyakumari is being implemented very fast. Why is there such a difference in attitude between the Eastern Highway and the Western Highway ? When are we going to have the work on the Eastern Highway completed, is the State Government in touch with the Central Government in regard to the Eastern Highway and what are the steps taken so far ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி ஒரு குறைபாடு இருந்துவருகிறது. அதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள அரசாங்கம் இப்போது தொடர்ந்து முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : These National Highways require a lot of money for repairs, etc., and the State Governments are spending almost all the money on them and neglect the interior roads. Cannot the maintenance of the National Highways be with the Central Government and the State Governments enabled to spend their resources on the roads in the interior parts of the State ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேசிய நெடுஞ்சாலை பராமரிப்புப் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி—பம்பாய் நெடுஞ்சாலை கன்னியாகுமரி பகுதியிலிருந்து இதுகாறும் ஆரம்பமாகவில்லை என்ற தகவல் இந்த அரசின் கையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்தத் தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தேசிய நெடுஞ்சாலைகளுக்காகவும், நெடுஞ் சாலைகளுக்காகவும் ஒதுக்கப்படுகிற மானியத் தொகையைக் கொண்டு தார் போட்ட ரோடுகளில் மேலும் மேலும் தார் போட்டுக் கொண்டு இருப்பதை விட அதில் வந்து சேருகிற கிளைச் சாலைகளை, பஸ் ஓடுகிற பகுதிகளையாவது இந்த மாதிரி சீரமைக்க இதிலிருந்து மானியத்தை ஒதுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா: தேசிய நெடுஞ்சாலைகளுக்குக் கொடுக்கிற மானியத்தை மற்ற சாலைகளுக்கு செலவிடமுடியாது.

திருப்பூர் நகராட்சி

***320 வினு : திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

திருப்பூர் நகரமன்றத்தை " தேர்வு நிலை நகராட்சியாக " மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. சு. துரைசாமி : "திருப்பூர் நகரமன்றத்தை தேர்வு நிலை நகராட்சியாக " மாற்றும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்போது அது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை கண்காணிப்பாளரிடமிருந்துகடைசிப்புள்ளி விவரங்கள் எதிர்பார்க்கபடுகிறது. திருப்பூர் நகராட்சியை தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பைப் பற்றி சில நகராட்சிகளை மீண்டும் வகைப்பாடு செய்வதற்கான அடங்கல் செயற்குறிப்புகளுடன் சேர்ந்து ஆய்வு செய்யப்படும்.

திரு. நா. காசிராமன் : ஃபர்ஸ்ட் கிரேட் முனிசிப்பாலிட்டியாக இருப்பதை செலக்ஷன் க்ரேட் முனிசிபாலிட்டியாக ஆக்கவேண்டுமென்றால் அந்த முனிசிப்பாலிட்டிக்கு என்னென்ன க்வாலிபிகேஷன்ஸ், தகுதிகள் வேண்டும் என்பதை தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஒரு லட்சம் ரூபாய் முதல் 2½ லட்சம் ரூபாய் வரையில் உள்ளதும் தனி நபர் வருமானம் இருபதுக்கு மேற்படுகிற வருமானம் உள்ள நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக வகைப்பாடு செய்யப்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : நகராட்சிகளின் தரத்தை உயர்த்துவது ஜனத்தொகை அடிப்படையில் என்றால் 1966-ம் ஆண்டு சென்ஸஸ்படி உயர்த்தப்படுமா ? அல்லது இப்போதைய ஜனத்தொகைப்படி உயர்த்தப்படுமா ? இப்போதுள்ள ஜனத்தொகைப்படி ஆரணி நகரமன்றத்தில் தரம் உயர்த்தப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மக்கள் தொகைபற்றி மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை கண்காணிப்பாளரிடமிருந்து தகவல் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அடிப்படையில் உயர்த்தும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : திருப்பூரைப் போன்று கோவை மாவட்டத்தில் ஈரோடும் ஒரு பெரிய நகரமாக இருந்து வருகிறது, வளர்ந்து வருகிறது. அதையும் செலக்ஷன் கிரேட் முனிஸிபாலிட்டியாக்க ஏதாவது திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் அந்தக் கணக்கெடுப்புகள் எல்லாம் நம் கைக்கு வந்த பிறகு ஈரோடும் அதில் அடங்குமானால் அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் மக்கள் தொகை, வருமானம் என்ற இரண்டு முறைகளைப் பற்றித் தெரிவித்தார்கள். இந்த இரண்டு முறையும் திருப்பூர் நகரமன்றத்திற்குப் பொருத்தமாகயிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மக்கள் தொகை குறித்த கடைசிப் புள்ளி விவரங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை கண்காணிப்பாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

Nutrition Programme

*** 321 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH :** Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the "Applied Nutrition Programme' has been introduced in our State;

(*b*) if so, the places where they are introduced ; and

(*c*) the details thereof ?